# சிறுவர் பாடல்

## தொகுதி - 01




குகதாசசர்மா சிவகுமார்

*Primary (Trd), B.A (Cey)*

*P.G.D.E*

# சிறுவர் பாடல்

## தொகுதி - 01

பதிப்பு;- 2004, ஆவணி




குகதாசசர்மா சிவகுமார்

*Primary (Trd), B.A (Cey)*

*P.G.D.E*

# சமர்ப்பணம்

என்னை இந்நிலைக்கு

உயர்த்திய என் தந்தை

அமரர் கார்த்திகேச ஐயர்

குகதாச சர்மாவுக்கு இச் சிறுநூலை

சமர்ப்பிக்கின்றேன்.

நூலாசிரியர்.





## யா/ஸ்ரீசோமாஸ்கந்தக் கல்லூரியின் முதல்வர் திரு.வ.ஆறுமுகம் அவர்கள் வழங்கிய

# அணிந்துரை

சிறுவர்கள் நாட்டின் செல்வங்கள். இவர்கள் உடல் உள ஆரோக்கியத்துடன் விளங்குவதற்கு பாடி ஆடி மகிழ அழகான சந்தங்களில் ஏழிலான இனிய பாடல்கள் தேவையாகும்.

இத்தேவையை உணர்ந்து சிறுவரின் உள்ளம் கவரும் முறையில் உணர்வு மிக்க பாடல்களை சிறுவர் பாடல் தொகுதி – I என்னும் பெயரில் எமது கல்லூரி ஆசிரியர் திரு.குகதாசசர்மா சிவகுமார் வெளியிட்டமை மகிழ்ச்சிக்குரியது.

பல ஆண்டுகளாக ஆசிரியராக பணியாற்றிய அனுபவத்தினூடாக சிறுவர்களின் உளவியலுக்கு ஏற்ற பாடல்களை இந்நூலாசிரியர் இயற்றியுள்ளார். இப்பாடல்கள் இசையும் அசைவும் ஒன்று கூடி வருவதாக அமைந்துள்ளமையால் சிறுவர்களுக்கு பெரிதும் பயன்படுமென்று கருதுகின்றேன்.

இந்நூலாசிரியர் சிறுவர் கல்வித்துறைக்கு மேலும் பல பயன்கள் தரும் பங்களிப்பினை படைத்தளிக்க வேண்டுமென எல்லாம் வல்ல சோமாஸ்கந்தப் பெருமான் பாதம் பணிந்து வாழ்த்துக் கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

புத்தூர்.
21.08.2004

திரு.வ.ஆறுமுகம்

# கடவுள் வணக்கம்

எங்கும் இருக்கும் இறைவனே
எல்லாம் வல்ல தலைவனே
சின்னஞ் சிறிய பாலகர் நாம்
சிறப்புடன் வளர அருள்தருவாய்

ஒன்றுபட்டு நாம் உழைத்திடவே
ஒற்றுமையுடன் நாம் சேர்ந்திடவே
ஒருவனே உலகின் முதல்வனே
ஒருவழி எமக்கு காட்டிடுவாய்

கல்வியில் சிறந்து விளங்கிடவே
கலைகளில் மேன்மை பெற்றிடவே
ஒழுக்கத்தின் உயர்வை மதித்திடவே
விழுப்பத்தை எமக்குத் தந்திடுவாய்.

# வாழ்வில் உயர்வோம்

அம்மா அப்பா சொற்கேட்போம்

ஆண்டவனையே வணங்கிடுவோம்

இனிமையாகப் பேசிடுவோம்

ஈகைக் குணத்தை வளர்த்திடுவோம்

உண்மையை என்றும் கூறிடுவோம்

ஊக்கத்துடன் நாம் செயற்படுவோம்

எண் எழுத்தைக் கற்றிடுவோம்

ஏதும் அற்றோர்க்கு உதவிடுவோம்

ஐயமின்றி படித்திடுவோம்

ஒற்றுமையுடன் வாழ்ந்திடுவோம்

ஓடியாடி மகிழ்ந்திடுவோம்

ஔவை பாடல் பாடிடுவோம்

அஃதே வாழ்வில் உயர்த்திவிடும்.

# கிளி

பச்சைக் கிளியே வா வா வா
கொச்சை மொழியை பேசிட வா

தென்னை மரத்தில் இருந்து நீ
தென்றல் காற்றில் ஆடுகின்றாய்

கொவ்வைப் பழத்தை நான் தருவேன்
கொஞ்சம் இங்கே வருவாயா?

பச்சை மிளகாய் தந்திடுவேன்
பறந்து இங்கே வந்திடுவாய்

இச்சையாகப் பேசிடவே
இவ்விடம் நீயும் வந்திடுவாய்.

# நிறங்கள்

பச்சை நிறத்துக் கிளியொன்று
பாடியே பறந்து செல்லுதுபார்

கறுப்பு நிறத்துக் காகமொன்று
காகா வெனவே கரையுது பார்

வெள்ளைக் கொக்கு பறந்து சென்று
புல் தரையில் இருக்குது பார்

நீல நிறத்து வானத்தின்
கோல அழகை நிமிர்ந்து பார்

சிவப்பு நிறத்து செவ்வரத்தம் பூ
சிங்கார மாகச் சிரிக்குது பார்

பாரினில் உள்ள அழகையே
பற்பல நிறங்களில் இரசித்துப் பார்.

# காகம்

காகமொன்று வானத்திலே
சுற்றிச் சுற்றிப் பறக்குது
காய வைத்த தானியத்தை
கண்டு கொண்டு பறக்குது

தலையைச் சரித்துப் பார்த்துக்கொண்டு
சட்டெனவே இறங்குது
கொப்பில் இருந்து பார்த்துக்கொண்டு
தம் இனத்தைக் கூட்டுது

அங்கு மிங்கும் பார்த்த படி
ஆனந்தமாய் கொத்துது
ஆளரவம் கேட்ட உடன்
ஆகாயத்தில் பறக்குது

# பனைமரம்

கறுத்த நெடுத்த பனைமரம்
கற்பக தரு பனைமரம்
அதிக காலம் வாழ்ந்திடும்
அதிக பயன் தந்திடும்

பெட்டி கடகம் சுளகுகளை
பெருமையுடன் தந்திடும்
பதநீரையும் பனங்கட்டியையும்
பதமாகவே கொடுத்திடும்

விசிறியையும் விறகையும்
வீடு கட்ட மரத்தையும்
விசேடமாகக் கொடுத்திடுமே
விந்தை மரம் பனைமரம்.

# அம்மா

அம்மா அம்மா வா வா
அழகு அம்மா வா வா
படங்கள் கொண்டு வா வா
பாடம் சொல்லித் தா தா

பட்டம் கொண்டு வா வா
பாட்டும் சொல்லித் தா தா
பாலைக் கொண்டு வா வா
படுத்து உறங்க வா வா



# மரங்கள்

உலகத்தில் உள்ள மரங்களில்
உதவும் பல மரங்களாம்
வாழும் போதும் உதவிடும்
மாளும் போதும் பயன்தரும்

உண்ண உணவைத் தந்திடும்
உடுக்க உடையைத் தந்திடும்
அழகைக் கொடுத்து நிற்குமே
அருமருந்தையும் கொடுக்குமே

விறகை எமக்குத் தந்திடும்
விந்தை மரங்கள் பலவுண்டு
நிழலைத் தரும் மரங்கள் உண்டு
நித்தம் அவற்றைப் பேணிடுவோம்.

# எம் ஆசிரியர்

எண்ணும் எழுத்தும் உரைத்திடுவார்
ஏற்றமுடன் வாழச் செய்திடுவார்
எண்ணில் இவர்க்கிணை யாருமில்லை
எவ்வுலகிலும் சிறப்பிவர்க்கே

கல்விக் கூடம் சென்று தினம்
கலைகள் பலவும் உணர்த்திடுவார்
கவலைகள் மறந்தே கற்பிப்பார்
காலமெல்லாம் கற்றுக் கொண்டிருப்பார்

ஒழுக்கம் உயர்வு தரும் என்று
ஒவ்வொரு நாளும் உரைத்திடுவார்
ஒற்றுமையே பலம் தரும் என்று
ஓதியே எம்மைத் திருத்திடுவார்.

## சூரியன்

வாழ்வுக்கு உதவும் சூரியன்
வளத்தை எமக்கு தருவான்
சிவந்த ஒளிக் கோளம் போல
சிறந்து என்றும் விளங்குவான்

காலை நேரம் உதிப்பவன்
கருணை உள்ளம் படைத்தவன்
மாலை நேரம் மறைபவன்
மனதிற்கு இனிமை கொடுப்பவன்.

## பட்டம்

வானில் ஏற்றும் பட்டமாம்
வடிவான பட்டமாம்
வண்ண வண்ண நிறங்களில்
கண்ணைக் கவரும் பட்டமாம்.

பாலர் ஏற்றும் பட்டமாம்
பல வகையாய் இருக்குமாம்
வானில் ஏற்றிய பட்டங்கள்
வாலை வாலை ஆட்டுமே.

# வீட்டு மிருகங்கள்

குட்டிப் பஞ்சுப் பூனைக் குட்டி
குதித்து குதித்து வந்தது
எட்டி எட்டி பார்த்துக் கொண்டு
எலி பிடிக்கச் சென்றது.

சின்னப் பப்பி நாய்க்குட்டி
சீறிக்கொண்டு வந்தது
துள்ளித் துள்ளி என்மேல் பாய்ந்து
துரத்திக் கொண்டு வந்தது.

கன்றுக்குட்டி வள்ளி வந்து
காலை நக்கி துள்ளிக் குதித்து
வாலை கிளப்பி ஓடிச் சென்று
வாசலுக்குப் போனது.

புள்ளி புள்ளி ஆட்டுக்குட்டி
துள்ளி துள்ளி வந்தது
புல்லை வாயால் கடித்து விட்டு
புதினமாகப் பார்த்தது.

# மாரிகாலம்

காலைநேரம் எழுந்திடுவோம் கடவுளையே தொழுதிடுவோம்
பகலவனின் வரவுடனே பலஒலிகள் கேட்டிடுவோம்
பறவையினம் பாட்டிசைத்து பறந்து செல்லும் காலையில்
மெல்லெனவே குளிர்காற்று சில்லென்று வீசிடுமே

குளிர்காற்று வீசுமே கூதலோடிப் போகுமே
குளிக்கும் போது எங்களுக்கு வெடவெடவென நடுங்குமே
மாரிகாலம் வந்தது நீலவானும் இருண்டது
நீரெங்கும் நிறைந்தது நிலமெல்லாம் குளிர்ந்தது

சிற்றெறும்பு மேட்டிற்கு செல்லும் காலமென்னவோ?
சில்வண்டு ஒலியெழுப்பும் மாரிகாலம் அல்லவோ?
மழைபெய்யத் தொடங்கும் போது மண்வாசம் வீசுமே
முற்றத்திலே மழைவெள்ளம் நிரம்பி ஓடிப் போகுமே

மின்னல் கண்ணைப் பறிக்குமே இடியும் காதை அடைக்குமே
யன்னலூடே மழைத்துளிகள் வந்து எம்மை நனைக்குமே
காற்றுச் சுழன்று அடிக்குமே கனத்த மரம் வீழுமே
கால்வாயால் மழைவெள்ளம் கரைபுரண்டு போகுமே

பள்ளிக்குச் செல்லும் போது பாதையோரம் சென்றிடுவோம்
பாதையிலே தேங்கிநிற்கும் நீரைக்கடந்து செல்லுவோம்
கொட்டும் மழை வந்திடுமே குடையும் கொண்டு செல்லுவோம்
கொதித்தாறிய நீரையே தினமும் நாம் குடித்திடுவோம்.



# ஒழுக்கம்

(1) சின்ன வண்ணச் சிறுவர் நாமே
சிரிக்கும் வண்ணச் சிறுவர் நாமே
வண்ணமான ஒழுக்கங்களை
வாயாரக் கூறிடுவோம்.

(2) சின்னஞ்சிறு சிட்டுப்போலே
சிறப்புடனே வாழ்ந்திருக்க
சிறந்த நல்லொழுக்கங்களை
சீராகப் போற்றிடுவோம்.

(3) உண்மை என்றும் பேசிடுவோம்
ஒற்றுமையாய் வாழ்ந்திடுவோம்
எல்லோர்க்கும் உதவிடுவோம்
பெரியோரை மதித்திடுவோம்.

(4) அம்மா அப்பா சொற்கேட்டு
அன்புடனே பழகிடுவோம்
இனிமையாகப் பேசியே நாம்
இன்பமாக வாழ்ந்திடுவோம்.

(5) அன்பாகப் பேசிடுவோம்
ஆண்டவனை நம்பிடுவோம்
துன்பம் அடைந்தவர்க்கு
ஓடிச்சென்று உதவிடுவோம்

(6) தீயவற்றை விலக்கிடுவோம்
தீமைகள் செய்யோம் என்றும்
நல்லவற்றை எண்ணிடுவோம்
நன்மைகள் செய்திடுவோம்.

(7) எம்மை நாமே திருத்திக் கொண்டால்
ஏனையோரும் திருந்திடுவர்
உன்னை நீயே திருத்திக் கொண்டால்
உலகமும் திருந்தும் தானே.

(8) நல்ல நல்ல பழக்கங்களை
நாளும் பொழுதும் பழகிடுவோம்
சின்னஞ் சிறு வயது முதல்
சிரித்துப் பேசி மகிழ்ந்திடுவோம்.

# சிறுவர் அபிநயப்பாடல்

## காட்டு விலங்குகள்

வாருங்கள் நாங்கள் விலங்குகளின் நடனங்களைப் பார்த்திடுவோம். காட்டு விலங்குகளின் நடனம் கண்டு களித்திடுவோம்.

பார்த்திடுவோம்........ கண்டு களித்திடுவோம்......... (2)

தாந்தி மித்திமி தந்தனத் தந்தோம்
தீந்திமித்திமி தெந்தனத் தெந்தோம்
தாந்திமித் திமி தீந்திமித் திமி
தெய்யக்கத் தெந்தக்கத் தெந்தக்கத் தெந்தோம்

தன்னானே தன தானனனே தன
தன்னானே தன தானனனே.

காட்டினிலே யானையுண்டு கரடியுண்டு மான்களுண்டு
பாய்ந்து செல்லும் புலியுமுண்டு பதுங்கி நிற்கும்
- முயலுமுண்டு

தன்னானே தன தானனனே தன
தன்னானே தன தான்ன்னே

மந்தி வந்தாரே சபைக்கு முந்தி வந்தாரே
வந்தனம் சொல்ல சபைக்கு வந்தவர்
சந்தனத்தையே கொடுத்துத் திரிகிறார்
மந்திவந்தாரே சபைக்கு முந்தி வந்தாரே.

தகிடதாம் தகிட தாம் ..............

ஆனை ஆடினாரே பெரிய ஆனை ஆடினாரே
சுளகுச் செவியை அசைத்து அசைத்து
தும்பிக்கையை ஆட்டி ஆட்டி
ஆனை ஆடினாரே பெரிய ஆனை ஆடினாரே

தெய்யத் தக்க தெய்யத் தாம் ...........

கரடி வந்தாரே பெரிய கரடி வந்தாரே
காரணமாகவே இங்கே வருகிறார்
கரிய கரடியார் விரைந்து வருகிறார்
கரடி வந்தாரே பெரிய கரடி வந்தாரே

தெய்யத் தக்க தெய்யத் தாம் .............

புள்ளிப்புள்ளி மான் குட்டியார்
துள்ளித்துள்ளி ஓடிவாறார்
அழகான புள்ளிகளுடன்
ஆனந்தமாக ஓடிவாறார்
கொம்புகளை ஆட்டி ஆட்டி
துள்ளித் துள்ளி ஓடிவாறார்
புள்ளிப் புள்ளி மான் குட்டியார்
துள்ளித் துள்ளி ஓடிவாறார்.

தக தகிட தக தகிட தக தகிட தெய் தெய் ...

பாயும் புலி நானே தான்
பதுங்கி நிற்பேன் காட்டிலே
பாய்ந்து விட்டால் ஓர் இரை
வீழும் என் பிடியிலே
பசித்தாலும் பச்சைப் புல்லைத் தீண்டாத வீரன் நான்
பக்குவமாய் இரை தனையே கிழித்துக் கிழித்துத்
- தின்னுவேன்

தகிட தகிட தகிட தாம்
தகிட தகிட தகிட தெய் .....

சின்ன வெள்ளை முயல்கள்
சிரித்து மகிழ்ந்து வந்தன
சிறிய இந்தக் காட்டிலே
சிறப்புடனே வாழ்ந்தன
சுற்றிச் சுற்றி வந்தன
சுதந்திரமாய் ஆடின
பாய்ந்து பாய்ந்து சென்றன
பச்சைப் புல்லைத் தின்றன.

தகிட தெய் தகிட தெய்........

காட்டு ராஜா நானே
காவலாளி நானே
காட்டு விலங்குகளின்
கடவுளும் நானே
இடி போன்ற குரலாலே
இவ் வனம் நடுங்குமே
பாய்ந்து கொன்று
இரைதனையே பிடித்துக் கிழித்துத் தின்னுவேன்

தெய்யத் தக்க தெய்யத் தாம்..........

நரியார் வந்தாரே குள்ள நரியார் வந்தாரே
ஏமாந்த நரியார் இங்கு வாறார்
ஏங்கிப் பார்த்து விரைந்து வாறார்
நரியார் வந்தாரே குள்ள நரியார் வந்தாரே

தகிட தகிட தகிட தாம்............

ஆடுவேனே ஊர்ந்து போவேனே (2)
சிவனாரின் கழுத்தினிலே அமர்ந்தேனே என்றும்
சீறிப்படமெடுத்தே திரிவேனே
ஆடுவேனே நான் ஆடுவேனே

தான தான தான தான தானா .............

தாந்திமித் திமித்திமி தந்தனத் தந்தோம்.....



முத்து பிறின்டேர்ஸ், சுன்னாகம்.